# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

# இலங்கை புகையிரத சேவைகள்

## 6,000 சோடிகள் RAIL JOINT SHIMS வழங்குவதற்கான பெறுகை

### பெறுகை இல. SRS/F.8116

01. கொழும்பு, த.பெ. இல. 355, தலைமை அலுவலகம், இலங்கை புகையிரத சேவைகள் சார்பில் இலங்கை புகையிரத சேவைகள் திணைக்களப் பெறுகைக் குழுவின் (மேல் நிலை) தலைவர் இலங்கை புகையிரத சேவைக்கு 6,000 சோடிகள் Rail Joint Shims வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார். விலைமனுதாரர்கள் தங்களது விலைமனுக்களை அற்றோணித்தத்துவ அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களின் ஊடாகச் சமர்ப்பிக்கலாம்.

02. சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் விலைமனுச் செயற்பாடானது நடாத்தப்படும்.

03. பின்வரும் முகவரியிலிருந்து 2025-06-06ஆம் திகதி முதல் 2025-07-21ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),**
**பெறுகைகள் உப திணைக்களம்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை.**

**தொலைபேசி : 94 (11) 2438078 அல்லது 94 (11) 2436818**
**தொலைநகல் : 94 (11) 2432044**
**மின்னஞ்சல் : srs.slr@gmail.com**
**இணையதளம் : www.railway.gov.lk**

04. விலைமனுதாரர்கள் இதனையொத்த ஏற்றுமதி சந்தையில் குறைந்தபட்சம் 5 வருடங்கள் அனுபவத்தையும் மற்றும் உற்பத்தித் துறையில் 10 வருடங்கள் அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இதனையொத்த தன்மையான உற்பத்தி வேலைகளுக்காக செல்லுபடியாகும் ISO 9001:2008 கொண்டவர்கள் விலைக்கோருவதற்கு தகுதியுடையவர்களாவர்.

05. இலங்கை ரூபாவில் 6,325.00 மட்டும் அல்லது அதற்குச் சமமானதும் இலகுவில் மாற்றக்கூடியதுமான வெளிநாட்டு நாணயத்தை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாகச் செலுத்துவதன் பேரில் 2025-06-06ஆம் திகதி முதல் 2025-07-21ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் (இலங்கை நேரம்) இலங்கையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகம், பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

06. விலைமனுக்கள் 2025-07-22ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும்

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு (மேல்நிலை),**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகம்,**
**ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு-10, இலங்கை**

பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2025-07-22ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இலங்கை, கொழும்பு 10, த.பெ. 1347, ஒல்கொட் மாவத்தை, பெறுகை உப திணைக்களம், 3ஆம் மாடி, 01ஆம் இலக்க அறையில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

**Ref. No. SRS/F.8116**